IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.331/2026

Deposition of Witness PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : சண்முகம் | Father Name : | |
| Village | : | Calling | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.05.2026

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் ஈரோடு சாஸ்திரி நகரில் குடியிருந்து வந்து ஈரோடு ரயில் நிலையத்தில் டீ வியாபாரம் செய்து வருகிறேன். நானும் என்னுடன் வியாபாரம் செய்யும் ஜாபர் என்பவரும் 13.12.2025 அன்று காலை 10 மணி அளவில் ரயில் நிலையம் நுழைவு வாயிலில் உள்ள பூங்கா அருகில் வந்த போது போலீசார் ஆஜர் எதிரியை பிடித்து விசாரித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது அந்த நபர் தனது பெயர் கருணா என்று கூறி, ரயிலில் பயணி ஒருவருடமிருந்து ஒரு கைப்பையை எடுத்து விட்டதாக சொன்னார். அந்தப் பையில் பணம் ரூ.2000/- ரூபாயும், செல்போனும் இருந்ததாக சொன்னார். பணமும், செல்போனும் எடுத்துக்கொண்டு, பேக்கை தூக்கி வீசி விட்டதாக சொன்னார்.

அந்த பணத்தை செலவு செய்துவிட்டதாகவும், தனது பேண்ட் பாக்கெட்டில் போன் வைத்திருப்பதாகவும் கூறினார். எதிரி சொன்ன

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.05.20 18:55:51 +0530

விவரத்தை எங்கள் முன்னிலையில் போலீசார் லேப்டாப்பில் பதிவு செய்து கொண்டனர். தற்போது என்னிடம் காட்டப்படும் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பிறகு ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரிதனது பேண்ட் பாக்கெட்டில் இருந்த செல்போனை எடுத்து போலீசாரிடம் கொடுத்தார். அந்த செல்போனை போலீசார் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினார்.

தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கைப்பற்றப்பட்ட செல்போன் ப்ளூ கலர் ரெட்மி ஆகும். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள செல்போன் தான் ஆஜர் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்டதாகும். **இந்த செல்போனின் புகைப்படம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் ரயில் நிலையத்தில் ஐந்து வருடமாக டீ வியாபாரம் செய்து வருகிறேன். ரயில் நிலையத்தில் ரயில் வந்து நின்ற பிறகு அந்த ரயிலில் டீ விற்பனை செய்வது தான் எனக்கு வழக்கம் என்றால் சரிதான். ரயில் நிற்கும் போது ரயிலுக்குள் நானும் ஜாஃபரும், டீ விற்பனை செய்வதுதான் வழக்கம் என்றால் சரிதான். காலை 6 மணியிலிருந்து மாலை 7 மணி வரை டீ வியாபாரம் செய்து வருவோம். ரயில் நிலையத்தில் டீ வியாபாரம் செய்து

S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR
Date: 2026.05.20 18:55:58 +0530

வருவதால் அங்குள்ள ரயில் நிலைய போலீசார் எங்களுக்கு தெரியும் என்றால் சரிதான். நாங்கள் எங்கள் வேலையை பார்ப்போம். அவர்கள் அவர்களது வேலையை பார்ப்பார்கள். நான் முதல் விசாரணையில் சொல்லி உள்ளது போல் எதிரி இடம் இருந்து போனை வாங்கியது யார் என்றால் உதவி ஆய்வாளர் போல் தான் தெரிந்தது. இந்த வழக்கு சம்பந்தமாக ரயில்வே காவல் நிலையத்துக்கு எத்தனை முறை நான் போனேன் என்றால், காலை 10 மணி அளவில் நான் டிபன் வாங்குவதற்காக வெளியில் வந்த போது நுழைவு வாயில் பூங்கா அருகில் போலீசார் விசாரித்துக் கொண்டிருந்தனர். நான் ரயில்வே காவல் நிலையத்திற்கு இந்த வழக்கு சம்பந்தமாக சென்றதில்லை. போன் கைப்பற்றும்போது யார் யார் செய்தார்கள் என்று தெரியுமா என்றால், நானும் ஜாபரும் கையொப்பம் செய்தோம், வேறு யார் கையொப்பம் செய்தனர் என்று எனக்கு தெரியாது.

எதிரி எவ்வளவு நேரம் சொன்னார், அது எவ்வளவு நேரம் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் நேரம் சரியாக சொல்ல இயலாது. எந்த தேதியில் போனை திருடியதாக எதிரி சொன்னாரா என்றால் தேதி, விபரம் சொல்லவில்லை. எங்கள் முன்னிலையில் கைப்பற்றப்பட்ட போன் on mode–ல் இருந்தது என்றால் அது எனக்கு தெரியாது. நான் முதல் விசாரணையில் சொல்லியது போல் கையொப்பம் செய்யவில்லை என்றும், நான் ரயில் நிலையத்தில் டீ விற்பனை செய்து வருவதால் காவல்துறையினர் எனக்கு பழக்கம் என்றும், அதற்காக நான் போலீசாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR
Date: 2026.05.20 18:56:06 +0530

கைப்பற்றப்பட்ட போன் ஆண்ட்ராய்டு போனா அல்லது பட்டன் போனா என்று எனக்கு தெரியாது என்றால் புகைப்படத்தில் காட்டிய போனை தான் அன்று காட்டினார்கள். நான் கையொப்பம் செய்த ஆவணங்கள் அனைத்தும் ரயில்வே காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டது என்றும், நான் எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல .

**மறுவிசாரணை இல்லை.**

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.05.20 18:56:13 +0530